பாடம் – 5

# மதம் அரசியல் மொழி

## 5.1 முன்னுரை

சமூக வளர்ச்சிக்குப் பெண் விடுதலை மிகவும் இன்றியமையாதது என்பதனை முன் பாடத்தில் அறிந்து கொண்டீர்கள். இப்பாடத்தில் மதம், அரசியல், மொழி ஆகியவை குறித்த தந்தை பெரியாரின் தொலைநோக்குச் சிந்தனைகளை அறிந்து கொள்ள இருக்கிறீர்கள்.

## 5.2 நோக்கங்கள்

- மக்களுக்குள் உயர்வு–தாழ்வு கற்பிக்கும் கருத்துகளுக்கு ஈ.வெ.இரா. இளமையிலிருந்தே எதிராகச் செயல்பட்டார் என்பதனை விளக்குதல்.
- மனுநீதி இந்துக்களின் வாழ்வியல் மீது செலுத்தும் ஆதிக்கங்களைப் பட்டியலிடுதல்.
- வருணாசிரமத்தை வலியுறுத்தி மனுநீதி கூறியுள்ளவற்றைப் பட்டியலிடுதல்.
- மனுநீதி தீண்டாமையை நிலை நிறுத்திய தன்மையை விளக்குதல்.
- கேரளாவில் சாதி ஆதிக்கமும், ஸ்மிருதி ஆதிக்கமும் மிகவும் வலிமையோடு இருந்ததைப் பட்டியலிடுதல்.
- வைக்கத்தில் நிலவிய தீண்டாமைக் கொடுமையைப் படம் பிடித்துக் காட்டுதல்.
- வைக்கம் சத்தியாகிரகம் எவ்வாறு தொடங்கப்பட்டது என்பதை விளக்குதல்.
- வைக்கம் சத்தியாகிரகத்தில் ஈ.வெ.இரா. எவ்வாறு ஈடுபட நேர்ந்தது என்பதை விளக்குதல்.
- வைக்கத்தில் ஈவெ.இரா.வுக்குக் கிடைத்த வரவேற்புக்கான காரணங்களைப் பட்டியலிடுதல்.
- ஈவெ.இரா. நாகம்மையாரும், எஸ்.ஆர். கண்ணம்மாளும் வைக்கம் போராட்டத்தில் ஈடுபட நேர்ந்த சூழ்நிலையை விளக்குதல்.
- 'கோயில் சொத்தில் அரசர் தலையிட முடியாது' என்று கூறி வந்ததற்கு ஈவெ.இரா. அளித்த பதிலை விளக்குதல்.
- 'சுதேசமித்திரன்', 'இந்து', 'யங் இந்தியா' போன்ற பத்திரிகைகள் வைக்கம் கிளர்ச்சிக்கு ஆதரவாகச் செய்தி வெளியிட்டதை விளக்குதல்.
- ஈழவர்களுக்கு ஈவெ.இரா. விடுத்த தனி வேண்டுகோளை விளக்குதல்.
- வைக்கம் கிளர்ச்சியால் காந்தி – திருவாங்கூர் இராணி–ஈ.வெ.இரா. ஆகியோர் கண்ட முடிவுகளை விளக்குதல்.
- வைக்கம் கிளர்ச்சி அடைந்த வெற்றியின் தன்மை பற்றி விளக்குதல்.
- ஈவெ.இரா.வின் சிறை வாழ்க்கைப் பற்றிப் பத்திரிகைகளும், தலைவர்களும் கூறிய செய்திகளை விளக்குதல்.

### 5.4.3 வைக்கம் கிளர்ச்சி

பொதுச் சாலைகளில் நடக்க உரிமையற்றவர்கள் என்று தடுக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை அன்றைய திருவிதாங்கூர் அரசின் எல்லைக்குள் வாழ்ந்த மக்களில் இந்துக்களில் 75 விழுக்காடு பேர் ஆவர். இவர்களில் ஈழவர் வகுப்பைச் சார்ந்தோர் மட்டும் ஏறக்குறைய ஏழு இலட்சம் பேராவர்.

கேரளத்தில் 'ஈழவர்' என்று அழைக்கப்படுவோர் தமிழ் நாட்டில் 'நாடார்' என்றும், கர்நாடகத்தில் 'ஈடிகா' என்றும் அறியப்படுவோராவர். கேரளத்தில் 'தீயர்' என அழைக்கப்படுவோர், இங்கு 'சாணார்' என்று அழைக்கப்படுகின்றனர்.

இந்த ஈழவர் வகுப்பைச் சார்ந்த ஒரு வழக்கறிஞரான மாதவன் என்பவர் திருவாங்கூர் அரசின் அரண்மனையின் ஒரு பகுதியில் அமைந்திருந்த நீதிமன்றத்துக்குப் போகக்கூடாது என்று தடுக்கப்பட்டதன் விளைவாக எழுந்ததுதான் 'வைக்கம்' தீண்டாமை ஒழிப்புக் கிளர்ச்சி ஆகும்.

இந்த மாதவன் வக்கில் சங்கதியை வைத்தே திருவனந்தபுரத்து ஈழவ சமுதாயத் தலைவர்கள் சத்தியாகிரகம் ஆரம்பிக்க வேண்டுமென்று முடிவு செய்தார்கள். வக்கில் மாதவன், டி.கே. மாதவன், கேரள காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.பி.கேசவ மேனன் மற்றும் சிலரும் சேர்ந்து, சத்தியாகிரகம் பற்றி முடிவு செய்தார்கள், முறை ஜெபத்தன்று ஆரம்பிப்பது என்று முடிவு செய்து எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டார்கள். நான் அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருக்கிறேன். எந்த ஊரில் சத்தியாகிரகத்தை ஆரம்பிக்கலாமென்பதற்கு, வைக்கத்தையே தேர்ந்தெடுத்தார்கள். ஏனென்றால், அந்த ஊரில்தான் ஊர் நடுவில் கோயிலும், அதன் 4 வாசலுக்கு எதிரிலும் 4 தேர் வீதிகள், கோயில் மதில்கள், சுற்றியும் தெருக்கள், பிரகாரம் எல்லாமும் இருக்கும்.

அந்த வீதிகளில் கீழ்ச் சாதிக்காரர்களான – 'அவர்ணஸ்தர்கள்' எல்லோரும், ஆயித்தக்காரர்கள் எனப்படும் தீண்டாதாரும் நான்கு புறத்திலும், கோயில் வாசல்களுக்கு முன்னாலும் நடக்கக்கூடாது. மூன்று பர்லாங், நான்கு பர்லாங் தூரத்திலேயுள்ள ரோட்டில் கூட நடக்காமல், ஒருமைல் தூரம் வேறு ரோட்டில் சுற்றிக் கொண்டுதான் எதிர் ரோட்டிற்குச் செல்ல வேண்டும். –

வைக்கத்தில் கோயிலுக்குப் பக்கமாக, வாசலுக்கு எதிராக அமைந்த தெருக்களில் தான் எல்லா முக்கிய ஆபீசுகளும், கோர்ட், போலீஸ் ஸ்டேஷன் முதலியனவும் இருந்தன. ஏதாவது போலீஸ்காரர்களையோ, இன்ஸ்பெக்டர்களையோ, குமாஸ்தாக்களையோ மாற்றுவதானாலும் கூட, கீழ்ச்சாதியார்களை அங்கு மாற்றி அனுப்பமாட்டார்கள். ஏனென்றால் அந்தப் போலீஸ் ஸ்டேஷன், கோர்ட்டுகள் இருக்கும் இடத்திற்கு போகக் கீழ்சாதியாருக்கு அனுமதி கிடையாது என்பதால்!

சத்தியாகிரகம் ஆரம்பமானவுடன் வக்கில் மாதவன், பாரிஸ்டர் கேசவமேனன், டி.கே. மாதவன், ஜார்ஜ் ஜோசப் முதலியவர்களைப் போல் சுமார் 19 பேரை அரஸ்ட் செய்யும்படி இராஜா உத்தரவிட்டு அதன்படி அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

தினசரி ஒருவர் வீதம் கைது செய்து, அவர்களை மாத்திரம் தனிப்பட்ட முறையில் ஸ்பெஷல் கைதிகளாக நடத்த உத்தரவிட்டார்கள். அப்போது இராஜாவிடம் திரு. பிட் என்ற வெள்ளைக்காரர் 'போலீஸ் அய்.ஜி' யாக இருந்தார். அவர் இந்த சத்தியாகிரகத்தை வெகு சமார்த்தியமாகவும் ரொம்ப ஜாக்கிரதையாகவும் சமாளித்தார். இந்த பத்தொன்பது பேரைப் பிடித்து உள்ளே போட்டவுடன், அடுத்து சத்தியாகிரகத்தில் ஈடுபட யாரும் முன் வரவில்லை; ஆள் கிடைக்கவில்லை. அதோடு அது நின்று விடும் போல் தோன்றியது.

உடனே, பாரிஸ்டர் மேனன், ஜார்ஜ் ஜோசப், கேசவ மேனன் ஆகிய மூவரும் சேர்ந்து கையெழுத்துப் போட்டு ஒரு கடிதம் எழுதி ஈ.வெ.இரா.விற்கு அனுப்பினார்கள். 'நீங்கள்

வந்துதான் இதற்கு உயிர் கொடுக்க வேண்டும்; இல்லாவிட்டால் நாங்கள் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை; அப்படி மன்னிப்புக்கேட்டுக் கொள்வதானால் எங்களுக்கொன்றும் நஷ்டம் இல்லையென்றாலும் பெரிய காரியம் கெட்டுப்போகுமே என்று கவலைப்படுகிறோம். உடனே நீங்கள் வந்து பொறுப்பு ஏற்க வேண்டும்' என்று எழுதி அனுப்பினார்கள். எனக்கேன் எழுதி அனுப்பினார்களென்றால், தீண்டாமையைப் பற்றிப் பேசுவதில் நான் கெட்டிக்காரன்; கிளர்ச்சியிலும் நான் கெட்டிக்காரன் என்று எனக்குப் பெயர். அப்போது நான் சுற்றுப் பிராயாணத்திலிருந்தேன்.

ஈரோட்டிற்கு எழுதப்பட்ட அந்தக் கடிதம், ரீடைரெக்ட் செய்யப்பட்டு, மதுரை ஜில்லாவிலுள்ள பண்ணைபுரம் என்று மலைப்பக்கக் கிராமத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவன் என்ற முறையில் நான் பேசிக் கொண்டிருந்த போது என் கைக்குக் கிடைத்தது.

உடனே மீதிச் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளையெல்லாம் ஒத்திவைத்து விட்டு, நேரே ஈரோட்டுக்குப் போனேன். வீட்டிற்கு வந்தவுடன் வைக்கத்திற்கு போய் சத்தியாகிரகத்தை நடத்துவதென்று மிக்க மகிழ்ச்சியோடு மூட்டைகட்டிவிட்டேன். திரு. இராசகோபாலாச்சாரியார் அவர்களுக்கும் நான் வரும் வரை தலைமைப் பதவியை ஏற்றுக் கொள்ளும்படி ஒரு கடிதம் எழுதிவிட்டு, 'இந்தச் சந்தர்ப்பம் ஒரு நல்ல வாய்ப்பு இதை விட்டால் இந்த மாதிரி அருமையான வேலை செய்ய வேறு வாய்ப்புக் கிடைக்காது' என்று அவருக்கு எழுதிவிட்டு, 2 பேரைக் கூட்டிக் கொண்டு வைக்கத்திற்கு வந்தேன்.

வைக்கம் போராட்டத்திற்காக நான் வருகிறேன் என்ற விஷயம் தெரிந்துகொண்டு, போலிஸ்கமிஷனர் திரு. பிட், இன்னொரு அய்யர் (அவர் பெயர் எனக்குச் சரியாய் ஞாபகத்திற்குவரவில்லை; சுப்ரமணிய அய்யர் என்று நினைக்கிறேன்), ஒரு தாசில்தார் எல்லோரும் படகிலிருந்து நான் இறங்கும்போதே என்னை வரவேற்றார்கள். 'மகாராஜா அவர்கள், எங்களை அவர் சார்பில் வரவேற்று வேண்டிய எல்லா சவுகரியங்களையும் செய்து தரச் சொன்னார்' என்று சொல்லி எங்களை வரவேற்றார்கள். இது எனக்குப் பெரும் ஆச்சரியத்தைத் தந்தது என்றாலும், ஏன் மகாராஜா அப்படிச் செய்தாரென்றால், அந்த இராஜா டெல்லிக்குப் போவதற்கு ஈரோடு வழியாக வந்து ஒருநாள் ஈரோட்டில் தங்கிவிட்டு அடுத்த நாள் டெல்லிக்கு இரயில் ஏறிப்போவது வழக்கம். அப்படி ஈரோட்டில் தங்கும்போது, அதற்கு வேண்டிய வசதிகளை மகாராஜாவின் சிப்பந்திகள் தங்குமிடம் எங்கள் சத்திரத்திலும், இராஜா தங்குமிடம் எங்கள் பங்களாவிலுமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். அப்படி மூன்று மாதத்திற்கு முன் வந்தபோது அவருடன் அந்தப் போலீஸ் அதிகாரியும் வந்து போனதில், அவர்கள் ஈரோட்டில் என்னை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறவர்களாகவும், நானும் அவர்களை எங்கள் வீட்டிற்கு வந்தபோது சந்தித்துப் பேசியவர்களாகவும் இருந்திருக்கிறோம். இதனால் மகாராஜா சற்று மரியாதை காட்டினார்.

என்னை விருந்தினராக மகாராஜா கருதினாலும்கூட, நான் பல இடங்களிலும் சென்று சத்தியாகிரகத்தைப் பற்றிப் பேசினேன்; காரசாரமாகப் பேசினேன். 'கீழ்ச்சாதி மக்களான நாம் உள்ளே போவதால் தீட்டுப்பட்டுவிடும், செத்துப் போகும் என்று சொல்லும் வைக்கத்தப்பனைப் போட்டு வேட்டி துவைக்கணும்' என்றெல்லாம் கடுமையாகப் பேசினேன். சுற்றுவட்டார மக்கள் ஆயிரக்கணக்கில் வைக்கம் வந்து கூடிவிட்டார்கள். அது இராஜாவுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது; 5,6 நாள்வரை சும்மாதான் இருந்தார். பலரும் போய் அவரிடம் நான் பேசுவது குறித்து முறையிட்டார்கள்; பிறகு இராஜாவினால் சும்மாயிருக்க முடியவில்லை.

இப்படிச் சுமார் 10 நாட்களானவுடனேயே ஒரு போலீஸ் (சூபரின்டெண்டண்ட்) அதிகாரி அவர் அய்யங்கார்; அவர் முயற்சியால் பி.சி.26 படி தடையுத்தரவு போட்டார். அந்நாட்டில் 26 என்பது இப்போது இங்கே 144 தடையுத்தரவு போன்றது. நானும் சட்டம்

மீறுவதைத் தவிர வேறு வழியில்லை என்று கண்டறிந்தேன். உடனே நான் சட்டத்தை மீறிப் பேசினேன். என்னுடன் (தற்போது காங்கிரசிலிருக்கும்) அய்யாமுத்து அவர்களும், மற்றுமிருவரும் சட்டம் மீறினோம்; எங்களைக் கைது செய்தார்கள்; எல்லோருக்கும் ஒரு மாதம் வெறுங்காவல் போட்டார்கள். என்னை அருவிக்குத்தி என்ற ஊரிலுள்ள ஜெயிலிலே வைத்தார்கள். அதற்குப் பிறகு என்னுடைய முதல் மனைவியார் திரு. நாகம்மையாரும், பிறகு நான் வெளியே வந்தவுடன் எனது தங்கை எஸ்.ஆர் கண்ணம்மாளும் மற்றும் சிலரும் வந்து நாடெல்லாம் சென்று பிரச்சாரம் செய்தார்கள். நான் விடுதலையாகி வந்து அதே மாதிரி மறுபடியும் திட்டம் போட்டேன்.

நான் வெளியே வருவதற்குள் இந்தக் கிளர்ச்சிக்கு ஏராளமான அளவில் ஆதரவு பெருகிவிட்டது; மளமளவென்று ஆட்களும் வந்து சேர ஆரம்பித்தனர்; ஏராளமான பேர்கள் பல பகுதியிலும் சென்று சுற்றுப் பயணம் செய்து தீவிரப் பிரச்சாரம் செய்தார்கள். எதிரிகளும் அடிதடி, காலித்தனம், கலவரங்கள் முதலியற்றிவிடுபட்டு, இதையெப்படியாவது ஒடுக்கிவிட வேண்டுமென்று பலவித முயற்சிகளும் செய்து பார்த்தார்கள்.

ஆனால் போராட்டத்திற்கு மக்கள் ஆதரவு பெருகிக் கொண்டேயிருந்தது. வெளி நாடுகளிலிருந்து மலையாளிகளும் சாதிக் கொடுமை என்பதைக் கண்டு மனந்துடித்து, அதற்குத் தங்கள் எதிர்ப்பையும், சாதிக் கொடுமைகளையெதிர்த்துச் செய்யப்படும் போராட்டத்திற்குத் தங்கள் ஆதரவையும் காட்டும் வண்ணம் தினம் ரூ. 50, 60, 100 என்று மணியார்டர் அனுப்பிக் கொண்டேயிருந்தார்கள்.

பெரிய பந்தல் போட்டுத் தினசரி போராட்ட வீரர்கள் முகாம் செய்திருந்த வீட்டில் 200, 300 பேர் சாப்பிடுவார்கள்; தேங்காயும் மற்ற காய்கறிகளும் மலைமலையாகக் குவிந்து கிடக்கும்; பெரிய கலியாண வீடு மாதிரி காரியங்கள் நடைபெறும்.

திரு. இராசகோபாலாச்சாரியார் எனக்குக் கடிதம் எழுதினார்; 'நீ ஏன் நம் நாட்டை விட்டுவிட்டு இன்னொரு நாட்டிலே போய் ரகளை செய்கிறாய்; அது சரியல்ல; அதை விட்டுவிட்டு நீ இங்குவந்து, நீ விட்டுச் சென்ற வேலைகளை கவனி' என்றெழுதினார். அப்போதிருந்த எஸ். சீனுவாசய்யங்காரும் இப்படித்தான் என்னை வைக்கத்திற்கு வந்தே அழைத்தார்; வரச் சொன்னார். அதே மாதிரி பத்திரிகையிலேயும் எழுதினார்கள். ஆனால், இதற்குள் சத்தியாகிரக ஆசிரமத்தில் 1000 பேருக்கு மேல் சேர்ந்தார்கள். தினமும் ஊர் முழுவதும் சத்தியாகிரக பஜனையும், தொண்டர்கள் ஊர்வலமும் நடந்து உணர்ச்சி வலுத்துவிட்டது". ("பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள்" பக். 87–91).

## ஈ.வெ.இரா.வின் வேண்டுகோள்

தமிழ் நாட்டில் நான் செய்யவிருக்கும் வேலை அபரிமிதமாக இருக்கிறதென்பது தெரிந்த விஷயம். அதிலுள்ள பொறுப்புகளையும் கஷ்டங்களையும் அறிந்து கொண்டிருக்கிறேன். மிகவும் உபத்திரவமற்ற கதர் வேலைக்கு ஏற்படும் பல தடைகளும் இயக்கத்திலுள்ள இதர கஷ்டங்களும் என் மனதிற்குத் தெரிந்தவைகளே. ஆனால் கேரள மாகாணத்திலிருந்து எனக்கு வந்திருக்கும் ஆக்ஞையை மீறி நடப்பதற்கில்லை. நெருக்கடியான நிலைமை ஏற்பட்டு விட்டது. அடக்குமுறை ஓங்கி நிற்கின்றது. தீண்டாமையை ஒழிக்கும் பொருட்டு ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப் உட்பட பல சத்தியாகிரகிகள் இந்த அடக்கு முறைக்கு ஆளாகிவிட்டனர். இத்தகைய எண்ணங்கள் என் மனத்தில் எழுந்தன. நான் புறப்பட்டுவிட்டேன். நானும் கைது செய்யப்படலாம். அது ஒரு பெரிய காரியமல்ல. தலைவர்களாகவிருந்தாலும் சரி, பிரச்சாரர்களாகயிருந்தாலும் சரி, தொண்டர்களாகினும் சரி, எல்லா ஜாதியினரும் கேரளத்திற்குக் கூட்டமாக வந்துவிட வேண்டுமென்று நான் விண்ணப்பித்துக் கொள்கிறேன். தொண்டு செய்ய முடியாதவர்கள் பண உதவியாது செய்யலாம்.



தமிழ் நாட்டிலுள்ள தொண்டர்கள் ஒரு சத்தியாகிர இயக்கத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக எழுதி இருக்கின்றனர். இத்தீண்டாமையை ஒழிப்பதற்காகக் கஷ்டப்படத் தயாரென்றும் அவர்கள் எழுதியிருக்கின்றனர். இதுதான் தகுந்த சமயம். இதை நழுவவிட்டு விடாதீர்கள். ஒவ்வொருவரும் இந்த உன்னத லட்சியத்திற்காக முன் வாருங்கள்' . ('சுதேசமித்திரன், 15.4.1924').

ஈ.வெ.இரா.வின் மேற்கண்ட வேண்டுகோளை ஏற்றுத் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் பெருந்தலைவர்களான டாக்டர். எம். எம்பெருமாள் நாயுடு, கோவை சி.அ. அய்யாமுத்து, எஸ். இராமநாதன், சி. இராசகோபாலாச்சாரி, டாக்டர். பி. வரதராஜுலு நாயுடு, எஸ். சீனிவாச அய்யங்கார் முதலானோரும்; மற்றும் பலரும் 1924 ஏப்ரிலுக்கும் ஜூனுக்கும் இடையில் வைக்கம் வந்து சேர்ந்தனர்.

ஈ.வெ.இரா. நாகம்மை தலைமையில் பெண் தொண்டர்களும் வைக்கத்தில் திரண்டனர்.

14.4.1924–இல் வைக்கத்தை அடைந்த ஈ.வெ.இரா. 15.4.1924 முதல் வைக்கத்தில் படகுத்துறை (Boat Jetty) அருகிலும் மற்றும் பல இடங்களிலும் வைக்கம் கிளர்ச்சியின் முதன்மை பற்றி உரையாற்றினார்.

தொடர்ந்து கொல்லம், தக்கலை முதலான இடங்களிலும் மற்றும் இரணியல், புதன்கடை, சிரயங்கில், நெடுங்கண்டை முதலான ஊர்களிலும் உரையாற்றித் தீண்டப்படாத வகுப்பு மக்களிடையேயும், சூத்திரர்களிடையேயும் பெரும் எழுச்சியை உருவாக்கினார், ஈ.வெ.இரா.

20.4.1924ல் திருவனந்தபுரத்தில் பப்ளிக் அலுவலகத்துக்குக் கீழ்ப்புறம் உள்ள மைதானத்தில் கே.ஜி. குஞ்சுக் கிருஷ்ணப்பிள்ளை தலைமையில் ஈ.வெ.இராமசாமி, எம். எம்பெருமாள் நாயுடு, மன்னத்து பத்மநாபப்பிள்ளை, கோவை சி.அ. அய்யாமுத்து, சாத்துக்குட்டி நாயர் ஆகியோர் உரையாற்றினர்.

அக்கூட்டத்தில் ஈ.வெ.இரா. ஆற்றிய உரையில் ஒரு பகுதி பின்வருமாறு: "வைக்கம் சத்தியாகிரகம் அரசுக்கு எதிரானதோ, மதத்துக்கு எதிரானதோ, ஒரு வகுப்புக்கு எதிரானதோ அன்று. இது ஒரு பொது நன்மையைக் கருதியதேயாகும். சமத்துவத்தை நிலை நாட்டுவதே இதன் குறிக்கோளாகும். இப்போராட்டத்துக்கு நல்ல நிலையிலுள்ளவர்களிடமிருந்து எந்த உதவியையும் நாம் எதிர்பார்க்க முடியாது. இந்து மதம் வேகமாகக் கரைந்து கொண்டிருக்கிறது. மற்ற மதங்களினுடைய மக்கள் தொகை ஒவ்வொரு பத்தாண்டிலும் 5%, 10%, 15% என்று கூடிக்கொண்டு போகின்ற போது, இந்துக்களின் மக்கள் தொகை 6% குறைந்து கொண்டே வருகிறது. இந்துக்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை என்பதோ, குழந்தைகளைப் பெறவில்லை என்பதோ இதன் பொருளாகுமா ?



இதே நிலைமை நீடிக்க அனுமதிக்கப்பட்டால் இந்து மதம் அழிந்து ஒழிந்துவிடும். இராஜபக்திக்கு எதிரானது என்றாலும் கூட மதபக்தி கடைபிடிக்கப்பட வேண்டுமென இந்து மதம் விதிக்கிறது.

இக்கிளர்ச்சியில் சமரசம் செய்து கொள்ளுவதற்கு அரசு முன்வைக்கும் யோசனைகள் ஏற்க கூடியனவாக இல்லை. அவற்றுள் ஓர் ஆலோசனை 'வைக்கம் கோயிலைச் சுற்றியுள்ள சாலை கோயிலுக்குச் சொந்தமானது என்பதால் அரசு இதில் தலையிட முடியாது' என்பதாகும். இது பொருந்தாது. திருவாங்கூர் அரசருக்கு எது சொந்தச் சொத்து? திருவாங்கூர் முழுவதுமே ஸ்ரீபத்மநாபசாமிக்குச் சொந்தமானது தானே ? பத்மநாபசாமி கோயில் அரசரின் பாட்டன் வீட்டுச் சொத்தா ?

மேலும், 'அந்தச் சாலையில், முகமதியர்களும், கிறித்துவர்களும் நடக்கக்கூடாது என்று அரசு ஆணையிட்டு விட்டால் நீங்கள் திருப்தி அடைவீர்களா? என அரசு கேட்கிறது.

இது ஒரு மூட அரசன் விதித்த கட்டளை பற்றிய கதையை எனக்கு நினைவூட்டுகிறது. முன்னொரு காலத்தில், 'தானியத்தை அளப்பவர்கள் படியைத் தலைகீழாக வைத்து அளக்கவும்' என்று ஒரு மூட அரசன் ஆணையிட்டான். அப்படி அளந்தால் நேராக வைத்து அளக்கும் போது கொள்ளும் தானியம் அளவுக்குக் கொள்ளாதே என்று மக்கள் முறையிட்டார்கள். அப்படியானால் படியைப் படுக்க வைத்துத் தானியத்தை அளங்கள்' என்று அரசன் சமரசயோசனை கூறினான். அதனால் தலைகீழாகப் படியை வைத்து அளக்கும் போது வந்த கொஞ்ச தானியம் கூட கொள்ளாமல் போய்விட்டது.

திருவாங்கூர் அரசின் சமரச யோசனை இன்னொரு விதமாகவும் இருக்கிறது. 'நாங்கள் பசியாக இருக்கிறோம்' என்று குரலெழுப்புகிறோம். 'மற்றவர்கள் புசிப்பதைப் பார்த்துத்தான் நீங்கள் பசிக்கிறது என்கிறீர்கள். அப்படியானால் புசிக்கிறவர்களுக்கும் சோறு போடாமல் நிறுத்தி விடுகிறோம்' என்பது போல, அரசின் கூற்று இருக்கிறது.

திருவாங்கூருக்கு நான் வந்த பொழுது, தங்கள் இலட்சியத்தை அடைவதற்காகக் கொஞ்சமும் தயக்கமில்லாமல் எல்லாச் சூதுகளையும் பொய்களையும் பேசுகிற பிரிட்டிஷ் அரசாங்கமே மோசமானது என்று கருதியிருந்தேன். ஆனால் இங்கு வந்து பார்த்த பிறகு திருவாங்கூர் அரசாங்கத்தைவிட பிரிட்டிஷ் அரசாங்கம் மிகவும் மேலானது என்று தெரிகிறது. ஏன் தெரியுமா?

இப்போது, நடப்பதற்கு உரிமை கோரி சத்தியாகிரகம் நடக்கும் சாலையின் இருமருங்கிலும் உள்ள மரங்களில் பி.டபிள்யூடி. (P.W.D) என்று ஏற்கனவே எழுதப்பட்டிருந்தது. ஆனால் நாங்கள்கிளர்ச்சி தொடங்கிய பிறகு இந்த எழுத்துகள் அரசாங்கத்தால் அழிக்கப்பட்டுவிட்டன. இது கள்ளத்தனமான செயல் அல்லவா? இப்படிப்பட்ட அரசாங்கத்தை நம்பி நம்முடைய குறிக்கோளை அடைய முடியுமா?

இந்த அரசர் வருணாசிரமத்தை மதித்து நடப்பவர் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். அவர் உயர்ந்த அரசாங்கப் பதவிகளுக்குக் கீழ்ச் சாதிக்காரர்கள் அமர்த்தும் பொழுது வருணாசிரமத்தை அவரால் பின்பற்ற முடிகிறதா? தீயர் வகுப்பைச் சேர்ந்த ஒருவர் மாவட்ட நீதிபதியாக நியமிக்கப் படுகிறார்; அவருக்கு ஏவலர்களாகப் பார்ப்பனர்கள் நியமிக்கப்படுகின்றனர். இது வருணாசிரமத்துக்கு எதிரானதல்லவா?

இந்துக்கள் என்போரில் சிலர் குறிப்பிட்ட தொழில்களைச் செய்கிறார்கள் என்பதாலேயே அவர்கள் தீண்டப்படாதவர்களா?

இவ்வாறு எண்ணற்ற எடுத்துக்காட்டுகளை விளக்கிக் கூறி, மக்களிடையே கிளர்ச்சிக்கான ஆதரவுகளை ஈ.வெ.இரா. திரட்டினார்.

## ஈழவர்களுக்கு ஈ.வெ.இரா. வேண்டுகோள்

சத்தியாகிரகத்தை ஒடுக்குவதற்கு, மேல் வருணத்தார் செய்த இந்தத் திட்டமிட்ட தாக்குதல்களை நேரில் கண்டு மனங்கொதித்த ஈ.வெ.இரா. உடனே ஈழவ வகுப்புத்தலைவர்களைக் கண்டு பேசச் சென்றார். மேலும், 6.7.1924 அன்று ஈழவர்களின் நெஞ்சைக் கிளறும் வண்ணம் ஓர் அறிக்கையை விடுத்தார். (7.7.1924 நாளிட்ட 'தி இந்து')

"திருவாங்கூர் அரசாங்கத்தார் திருவாங்கூரில் நான் நுழையக் கூடாது என விதித்திருந்த தடையை மீறி நான் நுழைந்து விட்டதற்காக, என் பெயரில் மீண்டும் நடவடிக்கை எடுத்துள்ளனர். 25.7.1924 அன்று மாஜிஸ்திரேட் முன்பு நேரில் வரவேண்டும்

என்று எனக்கு புதிய கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அன்று என் பேரிலான வழக்கு விசாரிக்கப்படலாம். இவ்வழக்கில் அரசு ஆணையை மீறியதற்காக எனக்குக் கடுந்தண்டனை வழங்கப்படலாம். நான் சிறைப்படவேண்டும் என்ற நோக்கத்தோடு வேண்டுமென்றே அரசாணையை மீறிவிட்டதாகப் பொதுமக்கள் கருதக்கூடாது என்று வேண்டிக் கொள்ளுகிறேன். ஸ்ரீமான் சி. இராசகோபாலாச்சாரியார் நேரிலும் கடிதம் மூலமாகவும் எக்காரணங் கொண்டும் தடையாணையை மீற வேண்டாமென்றும், சிறைப்பட வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார். இப்போது திருவனந்தபுரம் மத்திய சிறையில் தண்டனையனுபவிக்கிற தலைவர்களோ அல்லது வேறு பொறுப்பானவர்களோ வைக்கத்துக்கு வந்து இக்கிளர்ச்சிக்குப் பொறுப்பேற்கிற வரையில், நான் வைக்கத்தில் இருப்பதென்று முடிவு செய்து கொண்டேன். அதுவரையில் என் பேரில் இப்போது விதிக்கப்பட்டுள்ள வெளியேற்ற ஆணை தவிர மற்ற எந்த ஆணையையும் நான் மீறுவதாக இல்லை. திருவாங்கூரில் நுழையக் கூடாது என்கிற தடையாணையை மீறி நான் இங்கே எவ்வளவு காலம் தங்க முடியுமோ அவ்வளவு காலம் தங்குவதற்கு முடிவு செய்ததற்குக் காரணம் ஒன்றுதான்.

கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள சத்தியாகிரகிகள் முற்றிலும் அகிம்சையைக் கடைபிடிக்க வேண்டும்; தங்களுக்கு எதிரிகளால் இழைக்கப்படும் இழிவுகளையும், தாக்குதல்களையும் மனமுவந்தும் மகிழ்ச்சியோடும் அவர்கள் தாங்கிக் கொள்ள வேண்டும். அதற்காக நான் இங்கு இருக்க வேண்டும்.

நான் அருவிக் குத்தி சிறையிலிருந்து விடுதலை பெற்ற போது, இந்த நாடுகடத்தும் ஆணையை மீறுவதாக முடிவு செய்யவில்லை. ஆனால் வைக்கம் ஆசிரமத்துக்கு நான் வந்தவுடன் இங்கு சட்டத்துக்குப்புறம்பான நடவடிக்கைகளும், பயங்கரத் தாக்குதல்களும் மிக உச்சக்கட்டத்தில் நடப்பதைக் கண்டேன். சத்தியாகிரகிகள் பலர் கடுமையாகத் தாக்கப்பட்டனர்; முட்டிகளால் குத்தப்பட்டனர்; மற்றும் பல வகைகளில் கொடூரமாகத் தாக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டனர். இவர்களில் இருவர் உயிருக்கு ஆபத்தான காயங்களை அடைந்தனர்; ஆயினும் தெய்வாதீனமாகத் தப்பித்துக் கொண்டனர். இத்தகைய போக்கிரித்தனமான காரியங்களுக்கு அரசாங்க அதிகாரிகளும் உடந்தையாக இருந்திருக்கிறார்கள் என்று கண்டு அதிர்ச்சி அடைந்தேன். ஆதலால், என் பேரில் சட்ட விரோதமாகப் பிறப்பிக்கப்பட்டுள்ள நாடு கடத்தல் ஆணையை மீறுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்ந்தேன்.

இங்கு நடக்கும் சம்பவங்களைக் கூர்ந்து கவனிக்கும்படியும், சத்தியாகிரகிகள் மேற்கொண்டுள்ள போராட்டம் நியாயமானதுதான் எனவுணர்ந்தால் அதை ஆதரித்து அதற்கான தங்களின் பங்களிப்பைச் செய்ய வேண்டுமாயும் பொதுமக்களை வேண்டிக் கொள்கிறேன்.

ஈழவர்களுக்கு எனக் குறிப்பாக அவர் விடுத்துள்ள வேண்டுகோளில் கேரள மாநிலத்தில் ஏழு இலட்சம் பேர்களுக்கு மேல் உள்ள பெரிய எண்ணிக்கை கொண்ட நீங்கள், நீங்களாகவே முன் வந்து இந்தக் கிளர்ச்சியை ஏற்று நடத்தாதது நியாயமாகுமா என்று ஈ.வெ.இரா, வினாத் தொடுத்தார். இன்றுள்ள நிலையில் அன்றாடம் செலவுகளுக்கு 100 ரூபாயும் மற்றும் தொண்டர்கள் 100 பேரும் வேண்டப்படுகின்றனர்.

அரசாங்கம் சத்தியாகிரகம் செய்கிற எல்லோரையும் கைது செய்வது என்கிற முடிவை மேற்கொண்டால், மேலும் அதிக எண்ணிக்கையில் தொண்டர்கள் வேண்டப்படுவார்கள். இது சமயம் இங்கு ஈழவ வகுப்புத் தொண்டர்கள் 75 பேரே உள்ளனர்.

சத்தியாகிரக ஆசிரமத்திலுள்ள எல்லா நிர்வாகப் பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்ளவும், மகாத்மா காந்தியின் விருப்பப்படி சத்யாக்கிரகக் கிளர்ச்சியைத் தொடர்ந்து

நடத்தவும் ஈழவர் வகுப்பிலிருந்து தலைவர்கள் முன் வருவதும் தேவை. ஈழவ வகுப்பினர் நடைமுறையிலுள்ள எதையும் மாற்றுவதற்கு அவர்களாக விரும்பவில்லை என்றும், உள்ளூரிலுள்ள ஈழவர்களின் கருத்துகளை அறிந்து கொள்ளாதவர்களும் அவர்களின் கருத்துகளைப் பிரதிபலிக்காதவர்களும் ஆன வெளியாட்கள்தான் இங்குவந்து இந்தக் கிளர்ச்சியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்றும் தீய நோக்கத்தோடு செய்யப்படும் பிரச்சாரத்தைப் பொய்யாக ஆக்குவது ஈழவர்களின் கடமையல்லவா ?

ஈழவ சமுதாயத்தினர் சுயமரியாதை உள்ள மக்கள், என்ன விலை கொடுத்தவாது தங்களின் சமூக, சமுதாய உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்னும் உறுதிப் படைத்தவர்கள் என்று உலகத்தாருக்குத் துலாபாரமாகக் காட்ட இதைவிட வேறு ஒரு வாய்ப்பு ஈழவர்களுக்குக் கிடைக்குமா ?

என் அன்புக்குரிய ஈழவச் சகோதரர்களே!

உங்களின் போராட்டத்தை ஆதரித்து இந்தியாவே ஒன்று திரண்டு நிற்கிறது. இந்தியாவிலுள்ள மிகப்பெரிய தேச பக்தர்களும், சீர்திருத்தக்காரர்களும் உங்கள் கிளர்ச்சிக்கு வாழ்த்துகள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் மகாத்மா காந்தியின் வழிகாட்டுதலும் இருக்கிறது. இத்தகைய பொன்னான வாய்ப்பைக் கைநழுவவிடுவது அறிவுடைமை ஆகுமா என்று நீங்களே உங்களைக் கேட்டுக் கொள்ள வேண்டுகிறேன்.

ஈழவ வகுப்பு இளைஞர் ஒவ்வொருவரும், தங்கள் சமூகத்தின் அழைப்பை ஏற்றும், அவர்களின் தொண்டு தேவைப்படும் இந்நேரத்தில் துரோகம் இழைக்காமலும் மகிழ்ச்சியுடனும் பங்காற்ற முன்வர வேண்டும். ஈழவர்கள், சமூகத்தின் குஷ்டரோகிகளைப் போல மேல் வருணத்தாரால் நடத்தப்படுகிறார்கள். நாடோடிகளும், மதுக்குடியர்களும், கொலைக்காரர்களும் நிரம்பிய மேல்சாதியினர், சமூகத்தில் மற்ற எல்லோருக்கும் சமமாக உரிமைகளை அனுபவிக்கிறார்கள். ஆனால் ஈழவர்களில் சிறந்தவர்களாக உள்ளவர்கள் கூடத் தீண்டத்தகாதவர்கள், அண்டத்தகாதவர்கள் என்று சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள். ஆதலால் ஈழவ சமுதாயத்தார் இந்த இயக்கத்துக்கு எல்லாப் பங்களிப்பையும் செய்ய வேண்டுமென்றும், அதே நேரத்தில், இன்றையக் கிளர்ச்சியில் இவர்களுக்கு எதிரானவர்களின் பேரில் கெட்ட எண்ணமோ, வெறுப்போ இல்லாமல் செயலாற்ற வேண்டும் என்றும் ஈ.வெ.இரா. தம் அறிக்கையின் முடிவில் கேட்டுக் கொண்டார்.

## ஈ.வெ.இரா.வின் சிறை வாழ்க்கை

ஈவெ.இரா. தன்பேரில் வழக்குத் தொடுக்கப்படும் என்பதை 20.5.1924 மாலையிலேயே பொதுக்கூட்டத்தில் தெரிவித்தார். திருவாங்கூர் பீனல் கோடு சட்டத்தின் 181வது செக்சன்படி ஸ்ரீமான் ராமஸ்வாமி நாயகர் மீது ஏற்பட்டுள்ள குற்றத்திற்குச் சமாதானம் சொல்லும்படி மாஜிஸ்டிரேட் கேட்டு விட்டிருக்கிறார். மாலையில் நடந்தப் பொதுக் கூட்டத்தில் ஸ்ரீமான் நாயகர் பேசுகையில், தம்மை அதிகாரிகள் கைது செய்வது நிச்சயமென்றும், கொஞ்சங்கூட பலாத்காரத்திலிறங்காமல் இயக்கத்தை நடத்திக் கொண்டு போக வேண்டுமென்றும் சொன்னார்" (சு.மி. 22.5.24)

## ஈவெ.இரா. செய்த குற்றம் தான் என்ன ?

தீண்டப்படாத வகுப்பு மக்கள் பொதுச் சாலைகளில் நடக்கக்கூடாது என்பதை மீறி அந்தச் சாலைகளில் நடந்து போகும்படி அவர்களைத் தூண்டிவிட்டுப் பேசினார் என்பதுதான் குற்றச்சாட்டு. ஈவெ.இரா. கைது செய்யப்படுவார் என்ற செய்தி தெரிந்தவுடன் ஈவெ.இரா, நாகம்மை, எஸ். இராமநாதனைத் துணைக்கு அழைத்துக் கொண்டு, வைக்கம் வந்து சேர்ந்தார்.

ஈவெ.இரா.வின் பேரிலான வழக்கு 21.5.24 பகல் 1.30 மணிக்கு வைக்கம் ஸ்டேஷனரி மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது; ஒரு கூட்டமே அங்கே கூடிவிட்டது; நாகம்மையாரும் நீதிமன்றத்துக்கு வந்திருந்தார். பிச்சு ஐயங்கார், நாராயணப்பிள்ளை ஆகியோர் அரசுத்தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர். ஈவெ.இரா. ஒரு வாக்கு மூலம் மட்டும் அளித்தார். அவ்வாக்குமூலத்தில் குறிப்பிட்டதாவது:

அந்த கோர்ட்டு நியாயம் செய்யுமென்ற நம்பிக்கை தமக்கில்லையென்றும், விசாரணை வெறும் வேஷம் என்றும் கோர்ட்டாருடன் தாம் ஒத்துழைக்க முடியாதென்றும், சமாதானம் உண்டுபண்ணவே தாம் வைக்கத்துக்கு வந்ததாயும், எவ்விதமான தண்டனை விதித்தாலும் ஏற்கத் தயாரென்றும் சொன்னார். ....

கோர்ட்டுக்கு அடுத்த நாள் வருவதாக எழுத்து மூலம் உறுதி கூறும் படி காவல்துறையினர் கேட்டும் மறுத்துவிட்டார். வேண்டுமானால் தன்னை மாஜிஸ்திரேட் சிறைக்கு அனுப்பட்டும் என்றார். இதன் பேரில் நடைபெற்ற வழக்கில் 22.5.24 அன்று ஈவெ.இரா.வுக்கு ஒரு மாதம் வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட ஈவெ.இரா. 29.5.24 இரவு அருவிக்குத்தி சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார் . தண்டனைக் காலம் முழுவதும் அங்கேயே இருந்தார்.

சிறையிலிருந்து விடுதலை பெற்ற ஈவெ.இரா, கோவை அய்யாமுத்து ஆகியோர் திருவனந்தபுரம், கோட்டயம் மாவட்டங்களில் பேசக்கூடாது எனத்தடை விதிக்கப்பட்டது. அதே போல் சத்தியவிரதன், குரூர் நீலகண்டன் நம்பூதிரிபாத் ஆகியோருக்கும் தடை விதிக்கப்பட்டது. ஆனால் இவற்றையும் துச்சமாக எண்ணி எல்லாத் தலைவர்களும் கூட்டங்களில் கிளர்ச்சி பற்றி பேசி ஆதரவு திரட்டினர்.

***ஈவெ.இரா.வின் சிறைவாழ்க்கைப் பற்றி***
***சி. இராசகோபாலாச்சாரியார்***

ஈவெ.இரா.வுக்கு இரண்டாந்தடவை விதிக்கப்பட்டது கடுங்காவல் தண்டனையாகும். எனவே அவரை ஓர் அரசியல் கைதி போல் நடத்தாமல் சிறையில் மிகவும் கொடுமையாக நடத்தினர். இதுபற்றி சி.இராசகோபாலாச்சாரியர் மன வேதனையுடன் விடுத்த அறிக்கையின் சில பகுதிகள் பின் வருமாறு :

இப்பொழுது திருவனந்தபுரம் சிறைச்சாலையிலிருக்கும் சத்தியாகிரக கைதியான ஸ்ரீமான் ராமசுவாமி நாயக்கரை உணவு, இடவசதி முதலிய விஷயங்களில் சாமான்யக் கைதிகளைப் போல் நடத்துவதாக நம்பத்தகுந்த இடத்திலிருந்து எனக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. அவர் சிறை உடைகளை அணிகிறார். காலில் இரும்பு வளையம் போடப்பட்டிருக்கிறது. மற்ற சத்தியாகிரகக் கைதிகளிடமிருந்து பிரித்துத் தொலைவில் ஒரு தனி அறையில் அடைத்திருக்கிறார்கள். ஆயினும் ஸ்ரீமான் நாயக்கர் உற்சாகத்துடனிருந்து வருகிறார் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. அவருடன் நான் நெருங்கிப் பழகியிருப்பதால் அவரை நன்கறிவேன். அவர் செல்வத்தையும், அந்தஸ்த்தையும் துறந்து, சங்கடங்களை ஏற்றுக் கொண்ட தீரபுருஷர். அவருடைய தூய்மையைப் பரிசோதிப்பதற்காக இத்தகைய சோதனைகள் செய்வதற்கு அவர் சந்தோஷப்படுகிறார். .... பிரிட்டிஷ் இந்தியாவில் நடத்தப்படும் தோரணைக்கு இது முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. இருந்தாலும் ஸ்ரீமான் நாயக்கர் விஷயத்தில் திருவாங்கூர் கவர்மெண்டார் தவறான வழியில் இறங்கிவிட்டதாகத் தோன்றுகிறது. ஸ்ரீமான் நாயக்கருடைய அந்தஸ்து தெரியாமல் அவ்விதம் செய்யலாம். ஆனால் அது ஒரு சமாதானமாக முடியாது. மனச்சாட்சிக்காகச் சிறை செல்வோர் எத்தகையினராயினும் அவர்களைக் கண்ணியமாக நடத்த வேண்டும். அவருக்குக் கடுங்காவல் தண்டனை

விதிப்பதும், இரும்பு விலங்குகள் போடுவதும் சிறை உடைகளைக் கொடுப்பதும் மற்றவர்களுடன் சல்லாபமில்லாமற் செய்வதும் நியாய விரோதமாகும். திருவனந்தபுரம் சிறையிலிருக்கும் தீரரைத் தமிழ்நாடு பாராட்டுகிறது.

ஈவெ.இரா.வும், சி. இராசகோபாலாச்சாரியாரும் தீண்டாமை ஒழிப்பில் தீவிரமாக இருந்ததுடன், ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்து கொண்டிருந்தனர் என்பதை இதன் வழியாக நாம் அறிகிறோம்.

### மழையிலும் வெள்ளத்திலும் மனந்தளராத் தொண்டர்கள்

வைக்கம் கிளர்ச்சி 1924 மார்ச்சு 30–இல் தொடங்கப்பட்டது. மே, ஜூன், ஜூலை ஆகஸ்டு, நவம்பர் மாதங்களில் அப்பகுதியில் பெருமழை பெய்தது; பெரும் வெள்ளம் வந்தது. மழையில் நனைந்து கொண்டு மனங்குன்றாமல் ஒவ்வொரு குழுவும் மாறி, மாறி 2 மணிநேரம், 3 மணிநேரம் என்று முறைபோட்டுக் கொண்டு சத்தியாகிரகம் செய்தது. நான்கு புறச் சாலைகளின் சுற்றுப்பக்கத்திலும் பெருவெள்ளம் சூழ்ந்தது. அப்போதும் தொண்டர்கள் கழுத்தளவு வெள்ளத்தில் நின்று கொண்டு சத்தியாக்கிரகம் செய்தனர். 12.6.1924ல் நல்ல மழை பெய்தது; மழையிலும் மூன்று மணி நேரத்துக்கு ஒருவர் வீதம் போராட்டத்தில் பங்கேற்றனர்.

### பெண் தொண்டர்கள் கிளர்ச்சியும், நாகம்மையின் பங்களிப்பும்

வைக்கம் கிளர்ச்சிக்கெனப் பெண் தொண்டர்கள் குழு ஒன்றை அமைக்க 20.4.1924 அன்று முடிவு செய்யப்பட்டது. திருவாளர்கள் ராமஸ்வாமி நாயக்கர், எம்பெருமாள் நாயுடு, தாணுமாலைப் பிள்ளை, கோவிந்தன் சாணார் ஆகியவர்களின் மனைவிகள் மேலண்டை கோபுர வாசலையடுத்த ரஸ்தாவில் சென்று சத்தியாகிரகம் செய்தனர். ஸ்ரீமான் சர்மா என்ற இன்ஸ்பெக்டர் சாணாரின் மனைவியை மட்டும் போக விடாமல் மற்றவர்களை போகவிட்டார். ஏனெனில், அம்மாது தீயர் வகுப்பு ஸ்திரியென்றார். ஸ்ரீமான் நாயகர் மனைவியும் மற்ற ஸ்திரீகளும் இன்ஸ்பெக்டருடன் வாதித்தார்கள்.... 1 மணிநேரம் போல். ஸ்திரீத் தொண்டர்கள் சத்தியாகிரகம் செய்ய, ஆண் தொண்டர்கள் பிறகு வந்து அவர்களை அனுப்பிவிட்டனர். ('சுதேசமித்திரன் 22.5.1924')

### நாகம்மை கோவிலுக்குள் நுழைந்தார்

சூத்திர வகுப்புப் பெண்கள் கோவிலுக்குள் நுழைவதற்கு அதிகாரிகள் மறுத்ததாக, 15.6.1924 'சுதேசமித்திரன்' ஏட்டில் வெளிவந்த செய்தி தெரிவிக்கிறது.

கோவில் மதில்களுக்கு வெளியே உள்ள பொதுச் சாலைகளில் தீண்டப்படாதார் நடக்கக்கூடாது என்பதும்; சாதி இந்துக்கள் என்கிற சூத்திரர் குறிப்பாகப் பெண்கள் கோவிலுக்குள் போகக்கூடாது என்பதும் இந்து மத ஆசாரம். இதையும் மீறினார் ஈவெ.இரா. நாகம்மை.

### நாகம்மை தண்டிக்கப்பட்டார்

பெண் தொண்டர்கள் சாலையில் அமர்ந்து, தேசிய கீதம் பாடிக் கொண்டும், இராட்டையில் நூற்றுக் கொண்டும் நிதி திரட்டினர்.

"ஸ்ரீமான் ராமஸ்சுவாமி நாயக்கர் மனைவி மற்ற ஸ்திரீகளோடு பிரச்சார வேலையும் பண வசூலும் செய்து வருகிறார். சாது எம்.பிநாயரின் மனைவியும் அவருடன் வேலை செய்கிறார். பாடிக் கொண்டும் ராட்டினம் சுற்றிக் கொண்டும் இந்த இரண்டு தொண்டர்களும் போக்குவரத்துக்குத் தடையாயிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு ஐந்து ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் கொடுக்க மறுத்து கோர்ட்டு கலையும் வரை

காவலில் இருந்தார். விசாரணைக்கு முந்தி 8 தினங்கள் ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்...."

1921–இல், ஈவெ.இரா. ஈரோட்டில் மேற்கொண்ட கள்ளுக்கடை மறியல் போராட்டம் தொடங்கி அவர் ஈடுபட்ட எல்லாக் கிளர்ச்சிகளுக்கும் முழுத் துணை நின்றவர்கள் அவருடைய துணைவியார் நாகம்மையும், அவருடைய தங்கை கண்ணம்மாளும் ஆவர். வைக்கம் கிளர்ச்சியில் இவ்விரு பெண்டிரும் ஆற்றிய பங்கு, இந்தியாவில் நடைபெற்ற சமுதாய இழிவு நீக்க வரலாற்றுப் போராட்டத்தில் மிக முதன்மை வாய்ந்தது ஆகும்.

## திருவாங்கூர் அரசர் மறைவும், கைதிகள் விடுதலையும்

1924 ஜூலையில் நோயவாய்ப்பட்ட திருவாங்கூர் அரசர் ஸ்ரீபத்மநாபதாசவஞ்சி பால ஸ்ரீராமவர்ம குலசேகர கீர்த்தி திமன்னே சுல்தான் மகாராஜராஜ ராமராஜ பகதூர்ஷாம் ஷர்ஷிங் 7.8.1924–இல் மறைவுற்றார். இவர் 19.8.1995–இல் பட்டத்துக்கு வந்தவர். அரசர் இறந்துவிட்டதை முன்னிட்டு, வைக்கத்தில் மூன்று நாள் கிளர்ச்சி நிறுத்தி வைக்கப்பட்டது. மீண்டும் 12.8.24–இல் கிளர்ச்சி தொடங்கியது. சத்தியாகிரகத் தொண்டர்கள் நூல் நூற்பதை மும்முரமாக மேற்கொண்டனர். இதற்கிடையில் கேளப்பன் நாயர், ஏ.கே.பிள்ளை, கே.வேலாயுத மேனன் ஆகியோர் 16.8.24–இல் சிறையிலிருந்து விடுதலை அடைந்தனர். அநேகம் தொண்டர்கள் அவர்களை வரவேற்றனர்.

அரசரின் மறைவை அடுத்து, மகாராணி சேது லட்சுமிபாய் பட்டத்துக்கு வந்தார். இதையொட்டி வைக்கம் கிளர்ச்சியில் சிறைப்பட்ட தலைவர்கள், தொண்டர்கள் அனைவரும் 1.9.24–இல் விடுதலை செய்யப்பட்டனர். ஈ.வெ.இராமசாமி, ஜார்ஜ் ஜோசப் ஆகியோரும் விடுதலை ஆயினர்.

**வைக்கத்துக்கு காந்தி வருகை**

மோகனதாஸ் கரம்சந்த் காந்தி (M.K. Gandhi) தன்மகன் இராமதாஸ் காந்தி, மகாதேவ் தேசாய், சி. இராசகோபாலாச்சாரி, எஸ் இராமநாதன் ஆகியோருடன் 9.3.1925 பிற்பகல் 5.30 மணிக்கு வைக்கம் படகுத்துறை (Boat Jetty) வந்து இறங்கினார். அங்கு கேளப்பன் நாயரும், கிளர்ச்சித் தொண்டர்களும், காங்கிரசுக்காரர்களும் அவரை வரவேற்றனர். இதற்கு இடையில் காந்தியார் இராணி லட்சுமிபாயைக் கண்டு, தடுக்கப்பட்ட சாலைகளைத் தீண்டப்படாதவர்களுக்குத் திறந்துவிட வேண்டும் என்று கோரினார்.

காந்தி, இராணி சந்திப்புப் பற்றி ஈ.வெ.இரா கூறுவதைக் காண்போம்.

இராணியும் கூப்பிட்டு எங்களோடு ராஜி பண்ணி ஒரு உடன்பாட்டிற்கு வர விருப்பம் தெரிவித்தவுடன், அப்போது சமஸ்தானத்தில் திவானாக இருந்த ஒரு பார்ப்பனர், என்னிடத்தில் இராணி நேரே பேசக்கூடாது என்று கருதி, திரு. இராசகோபாலாச்சாரியாருக்குக் கடிதம் எழுதினார். உடன்பாட்டிற்கு வந்தால் எனக்கு மரியாதையும் புகழும் வந்துவிடுமோ ? அந்த மாதிரி வரக்கூடாதே என்று கருதி, அந்த வாய்ப்பைக் காந்தியாருக்கே அளித்து, காந்தியின் மூலமே காரியம் நடந்ததாக உலகுக்குக் காட்ட வேண்டுமென்று தந்திரம் செய்து, காந்திக்குக் கடிதம் எழுதினார். எனக்கும் அதைப் பற்றிக் கவலையில்லை; எப்படியாவது காரியம் வெற்றியானால் போதும்; நமக்குப் பேரும் புகழும் முக்கியமல்ல என்ற கருத்தில் நானும் ஒப்புக் கொண்டேன்.

காந்தியும் புறப்பட்டு வந்தார். இராணியோடு காந்தி பேசினார். (இப்படி இந்த சத்தியாகிரகம் நல்லபடி வேரூன்றி வெற்றி நிலைக்கு வந்தவுடன் பார்ப்பனர்கள் காந்தியை இதில் புகுத்தினார்கள்). இராணி காந்தியோடு பேசியபோது, இராணி தெரிவித்தார்கள்: 'நாங்கள் ரோடுகளைத் திறந்துவிட்டுவிடுகிறோம். ஆனால்

அதைவிட்டவுடன் நாயக்கர் கோயிலுக்குள் போக உரிமை வேண்டும் என்று கேட்டு ரகளை செய்தால் என்ன செய்வது? அதுதான் தயங்குகிறோம்' என்றார்கள். உடனே காந்தி 'டி.பி.யில் தங்கியிருந்த என்னிடத்தில் வந்து, இராணி சொன்னதைச் சொல்லி என்ன சொல்லுகிறாய்? இதை ஒப்புக் கொண்டு விடுவது நல்லது' என்றார். நான் சொன்னேன்: கோயில் பிரவேசம் என்பது காங்கிரஸின் இலட்சியமாக இல்லாவிட்டாலும் எனது இலட்சியம் அதுதானே, (கோயில் நுழைவு) அதைவிட்டுக் கொடுக்க எப்படி முடியும்? வேண்டுமானால் இராணிக்கு ஒரு வார்த்தை சொல்லுங்கள், 'இப்போதைக்கு அது மாதிரிக் கிளர்ச்சி எதுவுமிருக்காது. கொஞ்ச நாள், அது பற்றி மக்களுக்கு விளங்கும்படிப் பிரச்சாரம் செய்து, கலவரத்திற்கு இடமிருக்காது என்று கண்டால்தான் கிளர்ச்சி ஆரம்பிக்கப்படலாம் என்று சொல்லுங்கள்' என்று சொன்னேன்.

அதை, காந்தி இராணியிடம் சொன்னவுடன், இராணியார், 'ரோட்டில் யார் வேண்டுமானாலும் நடந்து செல்லலாம்' என்று உத்தரவு போட்டு, பொது ரோடாக ஆக்கினார்கள்.



**வைக்கம் கிளர்ச்சி வெற்றி**

காந்தி – திருவாங்கூர் இராணி சந்திப்பு, காந்தி, ஈ.வெ.இரா. விவாதம், காந்தி சவர்ணர்களுடன் மேற்கொண்ட விவாதம் இவற்றின் உடனடி விளைவாக, வைக்கத்தில் தீண்டப்படாத வகுப்பினர் நடக்கக்கூடாது என்று தடுக்கப்பட்டிருந்த பொதுச்சாலைகளைத் திறந்துவிட திருவாங்கூர் அரசு முடிவு செய்தது. தடுக்கப்பட்ட சாலைகளிலிருந்த தடைகள் நீக்கப்பட்டன.

வைக்கத்தில் உள்ள வைக்கத்தப்பன் மகாதேவர் கோவிலைச் சுற்றிலுமுள்ள நான்கு வீதிகளிலும் தீண்டப்படாதார் நடக்க உரிமை கிடைத்துவிட்டதால், கிளர்ச்சியை நிறுத்துவது என்று, 17.11.1925–இல் கூடிய கேரள காங்கிரஸ் தீண்டாமை ஒழிப்புக்குழு தீர்மானித்தது.

**வைக்கம் கிளர்ச்சியின் உடனடிப்பயனும், அது விளைவித்தத் தாக்கமும் எத்தகையவை?**

ஈராயிரம் ஆண்டுக்காலமாகப் பொதுத்தெருக்களில் நடக்க உரிமையற்றவர்கள் என ஆக்கப்பட்ட தீண்டப்படாத வகுப்பு மக்கள் பொதுத் தெருவில் நடக்க உரிமை கோரி, இந்தியாவில் முதன்முதலாக வைக்கத்தில் தொடங்கப்பட்ட "தீண்டாமை ஒழிப்புக் கிளர்ச்சி" 20 மாதங்கள் எண்ணற்ற தலைவர்களும், தொண்டர்களும், ஆடவரும், மகளிரும் தன்னலம் மறந்து போராடிய பின்னர், வெற்றி முகட்டைத் தொட்டது. இதுவே உடனடிப்பயன். அந்த முகட்டை நோக்கி இடையறாது ஏறிச் சென்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஈ.வெ.இராமசாமியும் அவர் தம் துணைவியார் நாகம்மையும் ஆவர் என்பது அனைவரும் அறிய வேண்டிய ஒன்றாகும்.

இதனை, அன்றே தொலைவிலிருந்து உற்று நோக்கி, வைக்கம் கிளர்ச்சி தன்னைக் கவர்ந்திழுத்த ஒரு நிகழ்ச்சி என்பதைத் தீண்டப்படாத வகுப்பு மக்களின் எல்லா அடிமை விலங்குகளையும் முறிக்கப் போராடிய மாமேதை டாக்டர். பி.ஆர். அம்பேத்கர் அவர் எழுதிய ஆசிரியஉரை ஒன்றில் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார். இது வைக்கம் கிளர்ச்சியால் அனைத்திந்திய அளவில் விளைந்த பெருந்தாக்கம் ஆகும்.

### [illegible].4.4 கோவில் நுழைவுப் போராட்டம்

உலகம் சுற்றிய பேரறிஞர் ராகுலசாங்கிருத்யாயன் (1893–1963) அண்மைக்காலம் வரை நம்மிடையே வாழ்ந்தவர். அவர் எழுதிய புகழ்பெற்ற நூல், 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்பதாகும். மானிடத்தின் தோற்றம் முதற்கொண்டு உலக

நாடுகளிலுள்ள மக்களிடையே நடந்த சமுதாய அரசியல் போராட்டங்களைப் பற்றி, எளிய ஒரு படிப்பாளியும் புரிந்து கொள்ள அந்நூல் உதவுகிறது.

அப்படிப்பட்ட வரலாற்று நூல்கள் இந்தியாவிலும் தென்னாட்டிலும் தமிழ் நாட்டிலும் பல வெளிவந்துள்ளன. அவை பெரிதும் சீனப் பவுத்தப் பயணிகளான் பாஹியான், யுவான் சுவாங் (கி.பி. 640) காலந்தொட்டு இங்கு வந்த அயல் நாட்டுப் பயணிகள், கிறித்துவப் பாதிரிகள், வெள்ளையரான மாகாண ஆளுநர்கள், மேலை நாட்டு வரலாற்று ஆராய்ச்சியாளர்கள், இந்தியாவைச் சார்ந்த மேல்சாதிப் படிப்பாளிகள் மற்றும் சாதி மத எண்ணங்களில் தோய்ந்துவிட்ட அறிஞர்கள், புலவர்கள் முதலியோரால் எழுதப்பட்டவையாகும். இப்படிப்பட்ட நூல்களைக் கொண்டு இந்தியாவில் தென்கோடியில் அமைந்துள்ள கேரளம், தமிழகம் ஆகிய நாடுகளில் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளில் நடைபெற்ற சமுதாய, அரசியல் போராட்டங்களைப் பற்றி ஓரளவே அறிய முடிகிறது. இவ்வெகுமக்கள் உரிமை பறிக்கப்பட்டவர்களாக வாழ்ந்தார்கள். கல்வி பெறும் உரிமையும், சமுதாய சமத்துவ உரிமையும் ஆட்சியாளராலும், மதத்தலைவர்களாலும் மறுக்கப்பட்டவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

கடவுளின் இருப்பிடம் எனப்படும் கோவில் (கோ + இல் = இறைவன் இருப்பிடம்) தொடங்கி மக்கள் வாழிடம், மக்களின்வாழ்வியல் பயன்பாட்டுக்கான மற்றப் பொது இடங்கள் எல்லாவற்றிலும் இவர்களுக்குச் சம உரிமை மறுக்கப்பட்டது. அப்படிக் கோவிலில் நுழையவும், வழிபடவும், பூசைசெய்யவும் வெகுமக்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளை மீட்டுப் பெறுவதற்காக நடந்தது தான் கோவில் நுழைவுப் போராட்டம்.

கி.பி. 1842–க்குப் பின்னர் தமிழர் பேரில் மிக வலிந்து சுமத்தப்பட்ட இந்து மத வேத, சாத்திரக் கோட்பாடுகள், இங்கு நாடார், சாணார், பள்ளர், பறையர், புலையர், சக்கிலியர், வண்ணார், மருத்துவர், நெசவாளர், வாணியர் முதலான எண்ணற்ற சாதியினரைக் கோவில் சுற்றுச் சுவர்களுக்கு வெளியே நிற்க வேண்டிய சாதிகளாக ஆக்கிவிட்டன.

இதன் கொடிய வடிவம் தான் கேரளத்தில் பல ஊர்களில் கோவில்களையும், அரண்மனைகளையும் ஒட்டிச் செல்லுகிற பொதுச் சாலைகளில் கூட, இவ்வகுப்புகளைச் சார்ந்த மக்கள் நடந்து செல்ல உரிமை அற்றவர்கள் என நடத்தப்பட்ட "அண்டாமை", "தீண்டாமை"க் கொடுமையாகும்.

இந்தக் கொடிய நடப்புகள் அவ்வப்போது ஆட்சிசெய்தவர்களால் மனு ஸ்மிருதி, சாணக்கியன் எனப்படும் கவுடல்யனின் அர்த்த சாஸ்திரம் இவற்றில் காணப்பட்ட விதிகளின்படி மேற்கொள்ளப்பட்டன. கவுடல்யனின் காலம் கி.மு. 300–க்கு முற்பட்டதாகும்.

கோவில்கள் என்பவை மக்களிடம் மூட நம்பிக்கைகளைப் பரப்பவும், அச்சத்தை ஊட்டவும்; பிராயச்சித்தம் செய்தல், பூசை செய்தல், பேய் ஓட்டுதல் என்கிற பேரால் அரசனும், மதகுருமார்களும் பணம் பறிக்கவும் ஏற்ற இடங்களாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என கவுடல்யன் விதித்துள்ளான்.

அரசு நியமன அலுவலர்களின் பணிகளாக சாணக்கியன் கூறுவதாவது :

"கோவில்கள் பலி பீடங்கள் இவற்றின் துணைகொண்டு நாட்டின் பலபகுதிகளிலும் பல்வேறு வடிவங்களில் சொத்துக்களைத் திரட்டி அரசனிடம் ஒப்படைக்க வேண்டும்."

"ஓர் இரவில் கடவுள் என்பதையோ, பலி பீடம் என்பதையோ மகான்கள் இருக்கும் இடம் என்பதையோ உண்டாக்குவது; கெட்ட சகுனத்தை முன் கூட்டி அறிந்து சொல்லுவது, ஆபத்துக்கள் நேராமல் தடுத்துக் கொள்ள பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்துவது என்கிற பேர்களால் கோவில் அதிகாரிகள் அரசுக்கு வருமானம் தேடுகிற பணியைச் செய்ய வேண்டும்.... ஒரு மரத்தில் பேய் இருப்பதாகக் கதை கட்டிவிட்டு அதை